**07.01.2025**

**OS No.483/2022**

PW.1 திரு. கோபாலகிருஷ்ணன்

(சாட்சி வா.சா.1 இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் 1 முதல் 2 வரை)**

இரண்டாம் பிரதிவாதி பவுல்ராஜை எனக்கு நன்றாகத் தெரியும். அடமானத் தேதிக்கு பின்பாக நான் மாதம் 21 ஆயிரம் ரூபாய் வட்டியாக பெற்று வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 2015 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை இரண்டாம் பிரதிவாதி பவுல்ராஜிடம் வட்டி பணத்தை பெற்று வந்தேன் என்று சொன்னால் சரிதான். நான் இரண்டாம் பிரதிவாதியிடம் இருந்து இந்த வட்டி பணத்தை வங்கி பரிவர்தனை மூலம் தான் பெற்று வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வகையில் ரூ.1,65,000/- வட்டியாக வங்கி பரிவர்தனை மூலம் சிறுக சிறுக ரொக்கமாகவும் சில தொகை வங்கி பரிவர்த்தனையாக பெற்றுள்ளேன். எனக்கு அடமானம் செய்து கொடுத்த அல்போன்ஸ் அவரின் தேவைக்காக பணம் பெற்றாரா அல்லது 2 வது பிரதிவாதி பவுல்ராஜ் அவர் தேவைக்கு என்று பணம் வாங்கினாரா என்றால் அல்போன்ஸ் கள்ளக்குறிச்சியில் சொத்து வாங்குவதற்காக என்னிடம் பணம் கடனாக பெற்றார். நான் 11.01.2022 அனுப்பிய வக்கீல் நோட்டீஸ்யில் ரூ.31 இலட்சம் தர வேண்டும் என்று கோரியிருக்கிறேனா என்றால் இல்லை 2015 மார்ச் முதல் தர வேண்டிய வட்டிக்கும் சேர்த்து நோட்டீஸ் அனுப்பி வைத்தேன் நான் அனுப்பிய முதல் அறிவிப்பில் எவ்வளவு தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. எனக்கும் அடமானம் ஏற்படுத்திக் கொடுத்த அல்போன்ஸ்கும் எந்த விதமான பணப்பரிவர்தனையும் நேரடியாக கிடையாது என்றால் சரியல்ல அன்போன்ஸ்க்கு நேரடியாக நான் தான் பணம் கொடுத்தேன். 2 வது பிரதிவாதி பவுல்ராஜ் வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பில் இருந்து அடமானம் ஏற்படுத்திய நாள் வரை கடனை திருப்பி செலுத்தும் விதமாக எனக்கு ரூ.11,15,000/-ஐ சிறுக சிறுக கொடுத்தார் என்றால் சரியல்ல. அசல் தொகைக்கு மேலாக நான் வட்டி பணத்தை பெற்றுவிட்டபடியால்

பிரதிவாதிகள் எனக்கு நான் கோரியபடி தொகை எதையும் கொடுக்க வேண்டிய பொறுப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. கடந்த 10 ஆண்டுகளாக கடன் தொகைக்கு வட்டி எதுவும் கொடுக்கவில்லை. 2 வது பிரதிவாதி பவுல்ராஜ் தவிர மற்ற பிரதிவாதிகளோடு எனக்கு தொடர்பு இல்லை என்றால் சரிதான்.

2 வது பிரதிவாதி வாங்கிய தனிப்பட்ட கடனுக்கு அவருடைய தந்தை அல்போன்ஸ் அவர்கள் அடமானப் பத்திரம் எழுதி கொடுத்தது செல்லாது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ளபடி மற்ற பிரவாதிகள் அடமானப் தொகையை செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. நான் அனுப்பியுள்ள இரண்டு வழக்கறிஞர் அறிவிப்புகளுக்கு இடையே முரண்பாடுகள் உள்ளது என்றால் முதல் அறிவிப்பு அனுப்பும் போது ரூ.31 இட்சம் என்பது தவறாக இருந்ததால் இரண்டாவது முறையாக இந்த தவறு திருத்தி அறிவிப்பு அனுப்பப்பட்டது. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் கண்டுள்ள தொகைக்கும் வழக்குரை தொகைக்கும் இடையே முரண்பாடு இருக்கிறது என்றால் சரியல்ல நான் அனுப்பிய 2 வது அறிவிப்பில் சொல்லியுள்ள தொகை தான் வழக்குரையில் கூறப்பட்டுள்ளது. நான் கோரியுள்ள வட்டி தொகை அதிக பட்சமானது என்றால் சரியல்ல.

(அறிவார்ந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)